# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத வூ கார்த்திகை மீ 21 உ வெள்ளிக்கிழமை (07-12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 11


# விமானக் குண்டு வீச்சினால் பருத்தித்துறையில் ஐவர் பலி!

## இருவர் காயம்; உடைமைகள் சேதம்

பருத்தித்துறை, டிசம்பர் 7

பருத்தித்துறை நகரில் ஸ்ரீலங்கா விமானப்படை பொம்மர்கள் நேற்றுக் காலை நடத்திய குண்டு வீச்சினால் ஓர் ஆசிரியர், பெண்மணி ஒருவர் உட்பட ஐவர் உயிரிழந்தனர். இரண்டு பேர் காயமுற்றனர்.

தனியார் கல்வி நிலையம், தனியார் மருத்துவ நிலையம், வர்த்தக நிலையங்கள், வீடுகள் உட்பட பல கட்டடங்கள் உடைமைகள் பெரும் சேதமுற்றன.

காலை 9.30 மணியளவில் பருத்தித்துறை பிரதான வீதியில் வேலாயுதம் மகா வித்தியாலயத்துக்கு சுமார் 50 யார் தூரத்தில் முதல் குண்டு வீசப்பட்டது. தொடர்ந்து இரண்டாவது குண்டும் வீசப்பட்டது.

பொம்மர்கள் தாழப் பறந்து குண்டு வீசிய சமயம், வேலாயுதம் மகா வித்தியாலயத்திலிருந்து பயத்தினால் வெளியே வீதிக்கு ஓடி வந்ததாகக் கூறப்படும் ஆசிரியர் ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் உயிரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உரும்பராய் தெற்கில் ஷெல்! ஒரே குடும்பத்தில் 2 பேர் பலி!!

யாழ்ப்பாணம், டிச. 7

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை 5.15 மணியளவில் அடுத்தடுத்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் உரும்பராய் தெற்கு, ஊரெழு, கோப்பாய் ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன.

உரும்பராய் தெற்கில் ஒரு வீட்டினுள் விழுந்த ஷெல்லினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பெண்கள் பலியாகினர். 2 வயதுக் குழந்தை உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

கோப்பாய் மத்தியில் விழுந்த ஷெல்லினால் ஞானரஞ்சிதம் செல்வரஞ்சன் [56 வயது] என்ற பெண்மணி படுகாயமடைந்தார் அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சாவகச்சேரிப் பகுதியிலும் பொம்மர்கள் குண்டு வீச்சு

### சரசாலையில் பெண் பலி; வீடுகள் பல சேதம்

சாவகச்சேரி, டிச. 7

சாவகச்சேரி, சரசாலைப் பகுதிகளிலும் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

காலை சுமார் 8 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் இரு தடவைகள் பொம்மர்கள் சாவகச்சேரி நகரப் பகுதியில் சிவன் கோவில் வீதி, ரயில் நிலையப் பகுதிகளில் பல குண்டுகளை வீசின. ஒரு குண்டு மயானத்திலும் விழுந்து வெடித்தது.

சிவன் கோவில் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற பெண் ஒருவரும், மற்றொருவரும் இச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

சிவன் கோவில், ரயில் நிலையம் மற்றும் வீடுகள் பல சேதமடைந்தன.

முற்பகல் 11 மணியளவில் சரசாலைப் பகுதியில் பொம்மர்கள் குண்டு வீச்சுக்களை நடத்தின.

இச்சம்பவத்தில் பெண்மணி ஒருவர் பலியானார். சிலர் காயமடைந்தனர். இப்பகுதியில் வீடுகள் பல சேதமுற்றன.

சரசாலையில் உயிரிழந்தவர் திருமதி ஆறுமுகம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் ப. நோ. கூ. சங்கத்தில் மக்கள் கூடியிருந்தனர். ஆயினும் அவர்கள் தெய்வாதீனமாகத் தப்பிக் கொண்டனர்.

சாவகச்சேரியிலும் சரசாலையிலும் காயமடைந்த இருவர் யாழ். ஆஸ்பத்திரியில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அம்பனையிலும் தாக்குதல்

நேற்று நண்பகல் 12 மணியளவில் அம்பனைச்சந்தி, அம்பனை — கொல்லங் கலட்டி வீதி ஆகிய பகுதிகளிலும் பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனால் பல வீடுகள் சேதமுற்றதாகத் தெரியவந்தது.

பொம்மர் தாக்குதலை அடுத்து மாவிட்டபுரம், தச்சன்காடு பகுதிகளில் துப்பாக்கி வேட்டுகளும் சரமாரியாகத் தீர்க்கப்பட்டன. மாவிட்டபுரம், கொல்லங் கலட்டி பன்னாலைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன. (உ-68)

## பொம்மர்கள் சுற்றியதால் மக்கள் பதற்றமுற்றனர்

யாழ்ப்பாணம், டிச. 7

நேற்று முற்பகல் 10 மணியளவில் இரு பொம்மர்கள் பெரும் ''உறுமல்'' சத்தத்துடன் யாழ். நகரையும், அதனை அண்டிய பல பகுதிகளையும் சுற்றிச் சுற்றி வட்டமிட்டன.

இதனால் மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர். பாடசாலைகளில் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் கலக்கமுற்றனர்.

அரச அலுவலகங்களில் ஊழியர்கள் பீதியுடன் காணப்பட்டனர். (ஒ)

## ஜனவரி இறுதியில் சுக்லா வருவார்

புதுடில்லி, டிச. 7

இந்திய வெளியுறவு அமைச்சர் வித்தியாசரண் சுக்லா, எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் கொழும்புக்கு விஜயம் செய்வார்.

இத்தகவலை புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் வெளியிட்டார். (உ-எ)

## 300 முஸ்லிம் இளைஞருக்கு தொண்டர் படை பயிற்சி

கொழும்பு, டிச. 7

முந்நூறு முஸ்லிம் இளைஞர்கள் தேசிய பாதுகாப்பு படை தொண்டர்களாக பயிற்சி பெற்று வருகின்றனர்.

இவர்களில் முதலாவது தொகுதியினரின் பயிற்சி முடிவடைந்து விட்டது.

பயிற்சி முடிந்து இரண்டாவது தொகுதித் தொண்டர்கள் இம்மாதம் 10 ஆம் திகதி வெளியேறுகின்றனர்.

இவர்கள் மன்னார் மாவட்டத்தில் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின சொன்னார். (உ-எ)

## மாணவரின் வரவு நேற்று அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிச. 7

யாழ், மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நேற்று மாணவர் வரவு அதிகரித்துக் காணப்பட்டது.

நகரிலுள்ள பாடசாலைகளி... [illegible] ...வரவு அதிகரித்திருந்தது. [ஒ-6]

## முகாம் அகதிகளுக்கு வாராந்த நிவாரணம்

யாழ்ப்பாணம், டிச. 7

யாழ். மாவட்டத்தில் அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு வாராந்தம் நிவாரணமாக உணவுப் பொருள்களை வழங்க புதிய திட்டம் ஒன்றை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு நடைமுறைப் படுத்தவிருக்கிறது.

யாழ் - மாவட்டத்தில் 159 அகதி முகாம்களில் 39 ஆயிரத்து 282 அகதிகள் தங்கியுள்ளனர்.

இவர்களது பராமரிப்பு வேலைகளை இதுவரை காலமும் அரச சார்பற்ற நிறுவனங்களே கவனித்து வந்தன.

கடந்த மாதத்துடன் அவை பராமரிப்பு வேலைகளை நிறுத்தியதை அடுத்து செயலக புனர்வாழ்வுப் பிரிவு இந்த முகாம்களுக்கு வாராந்தம் உணவுப் பொருள்களை வழங்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இந்தப் புதிய திட்டம் இம்மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது. [ஒ-3]

## தமிழ்க் குழுக்களுக்கும் ராணுவத்தில் இடமாம்!

தற்போது ஆயுதப் படையினரின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களும் இராணுவத்தில் சேர்க்கப்படுவர்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

முஸ்லிம்களும் இராணுவத்தில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். அதே மாதிரி தமிழர்களும் சேர்க்கப்படுவர் என்றும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சொன்னார். (உ-எ]

## வாழப்பாடிக்கு மிரட்டல்!

சென்னை, டிச. 7

தமிழகத்தில் இலங்கைத் தமிழ் போராளிகள் நடமாடுவது குறித்து அடிக்கடி சுட்டிக் காட்டிவரும் தமக்கு அச்சுறுத்தல் கடிதம் ஒன்று வந்திருப்பதாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி நேற்றுத் தெரிவித்தார்.

''போராளிகள் விஷயத்தில் திரு. இராமமூர்த்தி தலையிட்டால் அவரோ அல்லது அவர் தலைவர் ராஜீவ் காந்தியோ உயிரோடு இருக்க முடியாது''—என்று அக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததாக திரு. இராமமூர்த்தி செய்தியாளரிடம் சொன்னார். [உ-எ]

### வளைகுடாவில் திடீர் திருப்பம்:

## வெளிநாட்டாரை விடுவிக்க ஈராக் ஜனாதிபதி முடிவு

பக்தாத், டிச. 7

இராணுவ கேந்திர நிலையங்களில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள சகல வெளிநாட்டுப் பிரசைகளையும் விடுவிக்கப்போவதாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் நேற்று அறிவித்தார்.

ஈராக் அரசினால் தற்சமயம் 3 ஆயிரம் மேலை நாட்டவர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் முடிவை சம்பிரதாய பூர்வமாக அங்கீகரிக்க ஈராக்கிய நாடாளுமன்றம் உடனடியாகக் கூடவிருப்பதாக பக்தாத் வானொலி அறிவித்தது.

ஈராக்கின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, வளை

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வாங்கலாம் விற்கலாம்

புதிய 8'x8' கண்ணாடி (அலுமீனிய) சோகேஸ், மடிக்கக் கூடிய இரும்புக் கதிரை, மேசைகள், ஸ்பிறிங் கட்டில் விற்பனைக்குண்டு. மேலும் பாவித்த தரமான சகல பொருட்களையும் வாங்கவோ அல்லது பொருள்களை விற்கவோ ஜெயாஸ் ஒக்ஷன்மாட், டாஸ் கொம்ப்ளெக்ஸ், 161, பிரதானவீதி, யாழ்ப்பாணம். [15026)

### தேவை

ஹட்வெயர் பெயின்ற் விற்பனையில் அனுபவமுள்ள (Salesman) ஒருவரும் பார்மசியில் விற்பனையாளராக வேலை செய்யத் தகுதிபெற்ற அனுபவமுள்ள ஒருவரும் தேவை போட்டோப் பிரதி அத்தாட்சிப்பத்திரங்களுடன் எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறிப்பிட்டு அனுப்பவும் தொடர்பு: 157, C/o உதயன் (15027)

### டவர் வோச் வேக்ஸ்
### Tower watch works

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் இல:-11, யூபிலி பஜார் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதுடன் திருத்துவதற்கென ஒப்படைத்த கடிகாரங்களை 15 ஆம் திகதிக்குள் பெற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம். சகலவித கடிகார பற்றறிகளும், உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு (14783)

### முதலாம் பிள்ளை

ஆயிரமாயிரம் கவிதைகள், சிறுகதைகள் நாவல்களுக்கு மத்தியில் விற்பனையாகும் இரண்டே இரண்டு நாடக நூல்கள். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/- முதலாம் பிள்ளை 30/- நகைச்சுவை நிறைந்த 19 வானொலி நாடகங்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, [14680]

### தவறிவிட்டது

பிரான்ஸ் பாரிஸ்சில் இருந்து சி. செல்வரத்தினத்தால் சி. அழகேஸ்வரிக்கு அனுப்பப்பட்ட 165 அமெரிக்கன் டொலர் காசோலை கொமேஸல் வங்கி யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. பின் பக்கத்தில் உரியவர் முத்திரையில் ஒப்பமிட்டுள்ளார். எடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சு. சின்னக்தம்பி. 660/2, ஆஸ்பத்திரி வீதி, சங்கானை, கிழக்கு, சங்கானை. [15056]

### வேப்பம் உரம்

நெல், வெங்காயம், மிளகாய், புகையிலை மற்றும் சகல பயிர்களுக்கும் பாவிக்கக்கூடிய வேப்பம் உரம் விற்பனைக்கு உண்டு. சுப்பிரமணியம் அன்கோ ஆடிய பாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் [கல்வியங்காடுச் சந்தையில் இருந்து 100 யார்) [15051]

### மிருதங்க தொழில் நிலையம்

ஓம் சாயிராம் மிருதங்க தொழில் நிலையம் எல்லா விதமான மிருதங்க வேலைகளை நல்ல முறையில் திருத்தித்தரப்படும். தொடர்பு: ந. சிவானந்தன், 91/15, புங்கங்குளம் றோட், அரியாலை. [15050]

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, - யாழ்ப்பாணம்.

## O/L Day Classes 90

மீட்டல் வினா - விடை வகுப்புக்கள்

ஆரம்பம்: 10 - 12 - 1990 — (9.00 மணி)

| | | |
|---|---|---|
| கணிதம் | — | நவரஜா |
| விஞ்ஞானம் | — | செல்வவடிவேல் |
| சமூகக்கல்வி | — | முத்துலிங்கம் |
| ஆங்கிலம் | — | பொன் - சௌந்திரி |
| வர்த்தகம் | — | மகேஸ்வரன் |
| தமிழ் / சமயம் | — | பண்டிதர் |

(சி–5502)

# சித்திராலயா

351, கோவில் வீதி, நல்லூர்

நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகாமையில், கம்பன்கோட்டம் முன்பாக)

- ★ தெளிவான தரமான போட்டோஸ்ரற் பிரதிகள்,
- ★ பாஸ் போட் படம்,
- ★ அடையாள அட்டைப்படம்,
- ★ கறுப்பு-வெள்ளை படங்கள் வேண்டிய அளவிற்கு என்லாஜ்மென்ற்.

காலை 9.00 மணிமுதல் 1 00 மணி வரைக்கும், மாலை 2 15 மணி முதல் 5 00 மணி வரையு பெற்றுக் கொள்ளலாம்.

[ஞாயிறு விடுமுறைநாள்]

[சி/5506]

# பாடசாலை இடமாற்றம்

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் சகல வகுப்புக்களும் கடந்த 5 ஆம் திகதி முதல் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன பிற்பகல் 12.15 தொடக்கம் மாலை 4.15 வரை வகுப்புக்கள் நடைபெறும். [ஆ]

# தவறிவிட்டது

வேலணை மேற்கு பரஞான சம்பந்தபிள்ளை சிவலோகநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை ( 441341679 V ) யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியினுள் நின்றபோது தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து சிரமத்தைப் பாராது நல்லூருக்கு முன்பாக உள்ள

''மண்டேலா ரேடர்'' புத்தகசாலையில்

ஒப்படைக்கவும். மறக்கமுடியாத உதவியாக இருக்கும் அத்துடன் சன்மானம் வழங்கப்படும். (15018)

# விஜ்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## 92 கலை, வர்த்தகம் A/L

புதிய பிரிவு ஆரம்பம்

8 - 12 - 90 காலை 8.00 மணி

## 91 DAY CLASSES

புதிய பிரிவு ஆரம்பம்

10 - 12 - 90 காலை 8.00 மணி

## 90 Day Classes - Sat, Sun Classes

நடைபெறுகின்றன.

மு.குறிப்பு; i கலை, வர்த்தக வகுப்புக்களுகு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றது.

ii மாணவர்கள் அனுமதிகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

iii விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும். [சி–5504]

# குமாரன் ரூறிஸ்ட் இன்

மீண்டும் பழைய இடத்திலேயே குமாரன் ரூறிஸ்ட் இன் இயங்கத் தொடங்கி உள்ளது. 24 மணி நேர சேவையுடன் பாதுகாப்பான சூழலில் குறைந்த செலவில் நிறைந்த வசதியுடன் தங்கலாம், 24 மணி நேரம் தங்க ஒருவருக்கு ரூபா 50/- மட்டுமே.

**67, Stanley Road,
Jaffna.**

[15039]

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
# 1991-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01-01-1991 தொடக்கம் 31-12-1991 வரையிலான காலப்பகுதிக்குள் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம். சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 17-12-90ஆம் திகதி பிற்பகல் 4-15 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வியாபாரம் | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை ரூபா | கேள்வி வைப்புப் பணம் ரூபா | படிவக் கட்டணம் ரூ ா |
|---|---|---|---|---|
| 1. சாவகச்சேரி நகரசபை பொதுச்சந்தை | | 3,00,000/- | 1000/- | 50/- |
| 2. சாவகச்சேரி நகரசபை மீன் சந்தை | | 1,00,000/- | 1000/- | 50/- |
| 3. ஆட்டிறைச்சிக்கடை என் எம் எஸ் I | | 14,500/- | 1000/- | 50/- |
| 4. ஆட்டிறைச்சிக்கடை என் எம் எஸ் II | | 14.500/- | 1000/- | 50/- |
| 5. மாட்டிறைச்சிக்கடை என் எம் எஸ் III | | 55 740/- | 1000/- | 50/- |
| 6. மாட்டிறைச்சிக்கடை என் எம் எஸ் II | | 53,740/- | 1000/- | 50/- |
| 7. வாகனம் நிற்பாட்டுமிடங்களில் குத்தகை அறவிடுதல் | | 18,298/- | 250/- | 25/- |
| சேவை | | | | |
| 8. குப்பை கூளங்களை அகற்ற இரட்டை மாட்டு வண்டில்/ உழவு இயந்திரம் பெட்டி உட்பட வாடகைக்கு வழங்குதல் | | — | 100/- | 50/- |

மேற்படி வைப்புப் பணமும், கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 14-12-90ஆம் திகதி நண்பகல் 12-30 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

து. நவரத்தினராசா
செயலாளர்

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி, 05-12-90.
[சி/5500]

# மரண அறிவித்தல்

## திருமதி கண்ணம்மா நல்லநம்பி

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி கண்ணம்மா நல்லதம்பி அவர்கள் 6 - 12 - 90 அன்று காலமானார்.

அன்னார் கொழும்பு பிரபல வர்த்தகர் வெண்கலக்கடை நல்லதம்பி அவர்களின் அன்பு மனைவியும், இரத்தினசபாபதி (கனடா), அம்பிகாபதி, கமலாதேவி (இந்தியா), தவமணிதேவி (டுபாய்) நிர்மராசா (அலுமியம் தொழிற்சாலை உரிமையாளர் யாலல), ஆகியோரின் அனபுத் தாயாரும், மகேஸ்வரி(இந்தியா), Dr. சண்முகரத்தினம் சிவநாதன் (கணக்காளர் இந்தியா), குணரத்தினம் (பொறியிலாளர், (டுபாய்) நந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவாஸ்கரன், சுரேசன், ஜனகன், சரவணன், செந்தூரன், சிவசுதன் சிவவர்மன், சிவதாரணி, பிரசாந்தன், லாவண்யா, குவேரன், தர்மிதா, சுரேந்திரன் ஆகியோரின் அன்புப்பேத்தியும் ஆவார். அன்னாரது ஈமக் கிரியைகள் 8-12-90 சனிக்கிழமை காலை புங்குடுதீவில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக மணற்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உறறார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

சு. கோபாலபிள்ளை
[தம்பியார்)

10 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
[55054]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## காலம் கடந்த கண்டுபிடிப்பு

பிரேமதாசா அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்களில் திரு. தொண்டமானும் ஒருவர். அமைச்சரவையில் உள்ள ஒரேயொரு முழு மந்திரித் தமிழரும் அவரே, எல்லாவற்றுக்கும் மேலாக நீண்டகால அனுபவம் உள்ள அரசியல் வாதிகளில் ஒருவர். தொழிற் சங்க பலத்தை ஆதாரமாக வைத்து மலையகத் தமிழர் அரசியலை ஆக்கிரமிப்பவர்.

ஒரு காலத்தில், வடக்கு-கிழக்கு- மலையகத் தமிழர்கள் ஒன்று சேர்ந்து ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் அநீதிகளை, அநியாயங்களை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவர். ஆனால் சந்தர்ப்பம் வாய்த்த போது, பதவியைப் பற்றிக்கொள்ள நினைத்துக் குத்துக்கரணம் போட்டவர். வடக்கு-கிழக்கு மக்கள் நலனை மட்டுமன்றி, மலையக மக்கள் நலன்களையும் அமைச்சர் பதவிக்கு விலைபேசி அரசுடன் இணைந்தவர். ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கீழ்ப்பட்ட, அடங்கிய பிரிவாக இ. தொ. காவை மாற்றி அரசுக்கு ஆதரவளித்து வருபவர்.

எதிர்த்து நிற்பதைவிட அரசுடன் சேர்ந்து மலையகத் தமிழர்களின் சில பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என எண்ணியே தாம் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க 1977இல் முடிவு செய்ததாகக் கூறியவர். ஆனால் அரசாங்கத்துடன் சேர்ந்திருந்தாலும் சில சலுகைகளை மட்டுமே பெற முடியும்; உரிமைகளைப் பெறமுடியாது என்பதை உணர்ந்து, இப்போது அதிர்ச்சி வெளியிடுகிறார்!

அரசை அரவணைத்துப் போய், அதற்கு முதுகு சொறிவதன் மூலம், மலையகத் தமிழர்களுக்குப் பல வசதிகளைப் பெற்றுக்கொடுத்து விட்டதாகக் கூறிவந்தவர் அவர். ஆனால் இப்போது...? மலையகத்தில் தமிழர்களின் பெயர்கள் பெரும் எண்ணிக்கையில் வாக்காளர் இடாப்புகளில் இருந்து நீக்கப்பட்டிருப்பதாக ஆச்சரியம் அடைகிறார்!

சிங்கள அரசுகள் தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு விரும்புவதில்லை; அவர்களுக்குச் சில சலுகைகளைக் கொடுத்துத் திருப்திப்படுத்தவே முயல்கின்றன என்ற பெரும் உண்மையை, 13 வருடங்கள் மந்திரியாக இருந்த பின்னரே அவரால் கண்டுபிடிக்க முடிந்தது!

மலையகத் தமிழர்களின் நலன்களைத் தமது சொந்த அரசியல் லாபங்களுக்காக அடகு வைத்து, அவர்களின் அரசியல் விழிப்புணர்ச்சியை அடக்கி, வைத்து அதிகாரம் புரிந்ததின் விளைவு அமைச்சர் தொண்டமானின் உள்மனதில் குற்ற உணர்வை ஏற்படுத்தி விட்டதோ?

அவரின் காலம் கடந்த கண்டுபிடிப்பும், வயது முதிர்ச்சியில் ஏற்பட்டிருக்கும் குற்ற உணர்வும், 'சுடலை ஞானமும்' மலையகத் தமிழரின் இழந்துபோன உரிமைகளையும், கழிந்து போன காலத்தையும் மீட்டுத் தரப் போவதில்லை. இந்தக் கட்டத்திலாவது அவர் மலையகத் தமிழர் மீது அதிகாரம் செலுத்தும் அரசியலை முடித்துக் கொண்டு, அவர்களின் அரசியல் விழிப்புணர்ச்சியை அடக்கி வைக்க நினைக்காமல், அது தாராளமாகப் படர்வதற்கு இடம் கொடுப்பாரா? சேர்ந்து போய் சரணாகதி அடைவதைவிட எதிர்த்து நின்று போராடுவதே விடுதலைக்கு வித்திடும் என்பதை ஏற்றுக் கொள்வாரா?

# வவுனியா விவசாயக் கல்லூரி
# 6 மாதமாக இயங்காத நிலையில்
## பெறுமதி வாய்ந்த உபகரணங்களும் களவு

யாழ்ப்பாணம், டிச. 7

வவுனியா விவசாயக் கல்லூரி கடந்த ஆறுமாத காலமாக இயங்கவில்லை.

மாணவர்கள் பயிற்சி முடிந்தும் இறுதிப்பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலையில் உள்ளனர்.

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு விவசாயக் கல்வி வழங்க வவுனியாவில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இந்த விவசாயக் கல்லூரி நிறுவப்பட்டது.

இக்கல்லூரி இயங்காததால் முதலாவது ஆண்டு பயிற்சிக்குத் தோற்றிய 25 மாணவர்களும் இறுதிப் பரீட்சைக்கு தோற்றமுடியாத நிலையில் உள்ளனர்.

இங்கு 20 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் களவாடப்பட்டதுடன் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

இந்தக் கல்லூரியை கிளிநொச்சிக்கு இடம் மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (இ-3)

## நீர்வேலிக்கு முதலாமிடம்

யாழ்ப்பாணம், டிச.7

மாவீரர் தினத்தை ஒட்டி ப.நோ.கூ. சங்கங்களுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் நீர்வேலி ப.நோ.கூ. சங்கமும் முதலாவது இடத்தை பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

முதற்பரிசுக்கு நெல்லிப் பழை ப.நோ.கூ. சங்கமும் நீர்வேலி ப.நோ.கூ. சங்கமும் கூட்டாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தன. அதனால் இரண்டாம் இடம் எவருக்கும் வழங்கப்படவில்லை.

## எழுச்சி விழா

யாழ். முறைசாராக் கல்விப் பிரிவின் அவசர முதலுதவி சேவையின் உடுவில் கட்டளை முதலுதவி நிலையங்கள் இணைந்து நடத்தும் எழுச்சி விழா நாளை காலை இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் இந்த விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலை நிகழ்ச்சிகள் பலவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (இ-5)

## கப்பலில் வரும் பொருள்கள் கிளிநொச்சிப் பகுதிக்கும்

யாழ்ப்பாணம், டிச 7

கப்பலில் வரும் உணவுப் பொருள்களில் குறிப்பிட்ட அளவு பொருள்களை கிளிநொச்சி மாவட்டத்துக்கும் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கப்பல்களில் கொண்டு வரப்படும் பொருள்களில் கிளிநொச்சி மாவட்டத்துக்கென ஒதுக்கீடு செய்யப்படும் பொருள்களை அங்கு அனுப்ப யாழ். செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பில் இருந்து வாசண அணிமூலம் கிளிநொச்சி மாவட்டத்துக்கு பொருள்கள் கொண்டு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வரும் கப்பல்களில் இருந்து அந்த மாவட்டத்துக்கான பொருள்கள் முல்லைத்தீவு ஊடாக கப்பல் மார்க்கமாகவும், பளைப் பகுதிக்கு வாகனமூலமும் அனுப்பப்பட உள்ளன. (இ-3)

## பஸ் இறக்குமதிக்கு 120 கோடி ரூபா

கொழும்பு, டிச .7

பஸ்களை இறக்குமதி செய்வதற்கு 120 கோடி ரூபாவை ஸ்ரீலங்கா அரசு ஒதுக்கியுள்ளது. (இ-எ)

## இலவச நிவாரணம் நிறுத்தம்

தென்மராட்சி, டிச. 7

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் தங்கியுள்ள யாழ். மாவட்டத்தில்இருந்துஇடம் பெயர்ந்தோருக்கு முதலாம் திகதி தொடக்கம் இலவச நிவாரண உணவுப்பொருட்கள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் முன்னர் வசித்த இடங்களில் பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுப் பொருள்களை அந்தந்தப் பகுதியில் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது [இ-117]

# கூட்டுறவுப் பணியாளர்களை மக்கள் மதிக்கப் பழக வேண்டும்
## பாராட்டு விழாவில் பேச்சு

காங்கேசன்துறை, டிச. 6

ஏனைய மட்டங்களில் இடம்பெறும் குறைபாடுகள் எவரது கண்களுக்கும் தெரிவதில்லை. ஆனால் நெருக்கடியான காலகட்டத்திலும் தமது உயிரைப் பணயம் வைத்து பணியாற்றும் கூட்டுறவு ஊழியர்களை குற்றம் காணுவதற்கென்றே சிலர் இருக்கிறார்கள். உரிய வேதனமோ, கஷ்ட நிவாரணங்களோ இன்றி கடமை புரியும் கூட்டுறவு ஊழியர்களை மக்கள் மதிக்கப் பழகவேண்டும்.

இவ்வாறு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில் இடம் பெற்ற தியாகி கருணானந்த சிவம் நினைவுதின விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைச் செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் கூறினார்.

சங்கத் தலைவர் திரு எஸ். சிவமகாராஜா கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

இவ்விழாவில் தியாகி கருணானந்தசிவம் நினைவாக நெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க பணியாளர்கள் 70 பேருக்கு பல்வேறு பரிசில்களும், தங்கப் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப் பட்டன.

இவ்விழாவில் திரு. சிவசுப்பிரமணியம் மேலும் பேசுகையில் கூறியதாவது :-

இன்றுள்ள சூழ்நிலையில் கூட்டுறவு ஊழியர்களை பாராட்டிக் கௌரவிப்பது மிகவும் அவசியமாகும். சேவை உணர்வுடன் கடமை புரியும் அவர்களுக்கு நாம் நன்றி கூறவேண்டும்.

ஏனைய அரசாங்க ஊழியர்களுக்குள்ள சலுகைகள், விசேட படிகள், கூடுதல் சம்பள உயர்வுகள் எதுவுமின்றி கடமையாற்றும் கூட்டுறவு ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்க ஆவண செய்யவேண்டும். கூட்டுறவு ஊழியர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்து புதிய சம்பளத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த அருண்மாஸ்டர் உரையாற்றுகையில்–

போராட்டத்தின் உச்சக் கட்ட நிலையில் இன்று நாம் இருக்கிறோம். இந் நிலையில் போராட்டத்தில் களப்பலியான மாவீரர்களை நினைவு கூரும்போது எமது போராட்டத்திற்கு பல வழிகளிலும் உதவி புரிந்த தேசபக்தர்களையும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் கண்ட கனவை நனவாக்க எல்லோரும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்- என்று கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டுறவுப் பொறுப்பாளர் திரு. மகாதேவன், உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம், கல்வி அலுவலர் திரு. சி. வேலாயுதம் உட்படப் பலர் தியாகிகருணானந்தசிவம் ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்து உரையாற்றினர்.

''சந்தனக் கட்டைகள்'' ''இரட்டை முகங்கள்'' ஆகிய நாடகங்களும் மேடை ஏற்றப்பட்டன. (அ-68)

## வடக்கிற்கான மின்சாரம்:
# மாங்குளப் பகுதி திருத்த வேலை இப்போதைக்கு இல்லை

கிளிநொச்சி. டிச 7

மாங்குளத்தில் சேதம் அடைந்த நிலையில் உள்ள மின் கோபுரங்களை திருத்துவதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று கூறப்படுகிறது

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி மாங்குளம் இராணுவத்தினரால் முகாமுக்கு அருகில் இருந்த 132 கே. வி. லைன்களை இணைக்கும் இரண்டு மின் கோபுரங்களும் தகர்க்கப் பட்டன. இவை முகாமுக்கு அருகில் விமான ஓடுபாதை அமைப்பதற்காக தகர்க்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கோபுரங்களைத் திருத்துவதற்கான உதிரிப் பாகங்கள் கொழும்பிலோ அல்லது அநுராதபுரத்தில் இருந்தோ எடுத்து வரப்பட வேண்டும்.

இவற்றை எடுத்து வருவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் உள்ள மின்சாரசபை உயர் அதிகாரிகள் தான் மேற்கொள்ள வேண்டும் என இங்கு தெரிவிக்கப்படுகின்றது.

திருத்த வேலைகளுக்குத் தேவையான உபகரணங்களை எடுத்து வருவதோ, திருத்த வேலைகளைச் செய்வதோ இப்போது சாத்தியமில்லை என மின்சார சபை அதிகாரிகள் கருதுகின்றனர்.

மாங்குளம் இராணுவ முகாம் இருந்த பகுதியில் இன்னும் சகஜநிலைமை ஏற்படாததால் அங்கு செல்ல அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். [இ-76]

# இலை சுருட்டி நோயின் தாக்கமும் அதனை ஒழிக்கும் முறைகளும்

தற்போது நிலவும் பனிப் பருவம் பல நெற்பயிரில் இலை சுருட்டிப் புழுவின் தாக்கத்துக்கு உவப்பாக இருக்கிறது.

இந்த நோயின் அறிகுறிகள், நோயைத் தடுக்கும் வழிமுறைகள் பற்றி உதவி விவசாயப்பணிப்பாளர் (விரிவாக்கப்) திரு. சே. குலரத்தினம் தரும் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### அறிகுறி

இலைகளின் பச்சையம் சுரிக்கப்பட்டு பின்னாடை போல் வெண்ணிறமாக ... வெளிக்கும்.

இப்புழுவை ஆரம்பத்தில் கட்டுப்படுத்தாவிடில் இனி இலையைச் சுருட்டுவதுடன், காற்றடிக்கும் வேளையில் ஏனைய ஓரிரு இலைகளுடன் சேர்ந்து அவற்றையும் சேர்த்துச் சுருட்டி உள்ளிருந்து சேதம் விளைவிக்கும்.

எனவே, இந்நிலையில் இப்புழுவைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாகும்.

அத்துடன் கூடிய கலவை பாவிக்க வேண்டிய தேவையும் ஏற்படும்.

... பட்டவுடன் கீழ் தரப்பட்ட பூச்சிநாசினி ... ஏதாவது ஒன்றை குறிப்பிட்ட அளவிலும், முறைப்படியும் விசிறிக் கட்டுப்படுத்தவும்.

1. ... ன்குரோட்டபாஸ்.
2. குளோரோனைபொஸ்
3. மெபஸியோன்

30 மி. லீ. மருந்தை 13. 5 லீற்றர் நீரில் கலந்து விசிறவும்.

மழை காலங்களில் இக் கலவையுடன் ஒட்டும் திரவமாகிய ''சேர்பெக்டென்ட்'' அல்லது ''ட்ரைடோன்'' என்னும் ஒட்டுத்திரவத்தைப் பாவிக்கவும்

குறிப்பு:- இப் புழுவின் தாக்கத்தை பூரணமாகக் கட்டுப்படுத்த விசிறிப் 10 நாட்களின் பின் திரும்பவும் விசிறப் பட வேண்டும். [இ-6]

## நூற்றாண்டு நினைவுச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிச. 7

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவை ஒட்டிய நினைவுச் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் அதிபர் திரு. க. சி. குகதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் 'நாவலர் மரபில் இந்துக்கல்லூரி' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் உரையாற்றுவார். (அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணப் பொருள்களுக்கு புதிய விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், டிச. 7
யாழ் – மாவட்டத்தில் நிவாரணமாக வழங்கப்படும் உணவுப் பொருள்களுக்கு புனர்வாழ்வு அமைச்சு விலை நிர்ணயம் செய்துள்ளது.

புதியவிலை ஒரு கிலோவுக்கு வருமாறு:–

சீனி – 25 ரூபா 75 சதம்,
பருப்பு – 48 ரூபா 50 சதம்,
மா – 14 ரூபா 25 சதம்,
அரிசி – 13 ரூபா 15 சதம்.

அடுத்த நிவாரணக்கொடுப்பனவில் இருந்து இந்தப்புதிய விலைகள் அமுலுக்கு வர இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ–3]

## கிளிநொச்சிக்கு 15 லொறிகளில் உணவு

யாழ்ப்பாணம், டிச. 7
கிளிநொச்சி மாவட்டத்துக்கான அத்தியாவசியப் பொருள்கள் 15 லொறிகளில் நாளை வந்து சேர இருக்கின்றன.

இவற்றில் மருந்து வகைகளும் அடங்கும். (ஓ–3)

தமிழகக் கடலோரப் பாதுகாப்பு:

# ராணுவத்தை பயன்படுத்தவும் மத்திய அரசு தயங்காதாம்

புதுடில்லி, டிச. 7
தமிழகக் கடலோர எல்லைகளைப் பாதுகாக்க இராணுவத்தைப் பயன்படுத்த மத்திய அரசு தயங்காது.

மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபுக்கோன் சஹாய் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியிடம் முன்கண்டவாறு தெரிவித்தார் என மத்திய அரசு அதிகாரி ஒருவர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அஸ்ஸாம் மாநில எல்லையை தற்போது இராணுவம் பாதுகாத்து வருகிறது. அந்த மாதிரியான நடவடிக்கைகளையும் தமிழகத்தில் மத்திய அரசு எடுக்கத்தயங்காது.

தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கை பராமரிக்க இராணுவத் துணைப்படை உட்பட சகல உதவிகளையும் மத்திய அரசு வழங்கத் தீர்மானித்துள்ளது.

எந்த அந்நியரின் ஊடுருவலும் தமிழ்நாட்டில் இடம் பெறுவதை மத்திய அரசு சகித்துக்கொள்ளாது.

இப்படி உள்துறை இணை அமைச்சர் சஹாய்முதலமைச்சரிடம் கூறினார் என்றும் அந்த அதிகாரி சொன்னார். (இ – எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சீவரத்தினம் தர்மலிங்கர்

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சீவரத்தினம் தர்மலிங்கர் 23–11–90இல் இங்கிலாந்தில் காலமானார். இவர் காலம் சென்ற தர்மலிங்கத்தின் [Retired Divisional Superintendant of Post Offices] மனைவியும், பத்மலோசனி, Dr. சிவேந்திரன் [Eye surgeon U. S. A], புஸ்பலோசனி [U.S. A] நீலலோசனி [U. S. A]. நேத்திரலோசனி, நிர்மலலோசனி [U.K] ஆகியோரின் தாயாரும் V. பேரம்பலம் [Retired Commissioner of Educational Publications] ரஞ்சனி (U. S. A) Dr. V. கனகராசா [Anaesthetist U. S. A], Dr. M. தம்பிராசா [Surgeon U. S, A] Dr. K. கிருஷ்ணராசா [Regional Dental Surgeon Jaffna], Dr. M. அருமைநாயகம் [Psychiatrist U. K] ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1- 12- 90 இல் இங்கிலாந்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr. க. கிருஷ்ணராசா

92, புங்கங்குளம் வீதி,
கொழும்புத்துறை.
[15053]

## வேலுப்பிள்ளை திசைநாயகம் நடராஜா

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முன்னாள் ஆசிரியரும், சாவகச்சேரி மாவட்ட சாரணர் சங்க முன்னாள் உதவி ஆணையாளரும், சென் ஜோன் அம்புலன்ஸ் படை யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் பிரதேச அத்தியட்சகருமான திரு. வேலுப்பிள்ளை திசைநாயகம் நடராஜா 1990–12-04 ஆம் திகதி காலமானார். அன்னார் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முன்னாள் ஆசிரியை மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும். சிலோன் பாக்ஸ் நிறுவனத்தின் கணக்காளர் கோபிராஜ், அரச சட்டத்தரணி ரவிராஜ். கில்பீஸ் லங்கா லிமிட்டெட்டைச் சேர்ந்த இன்பராஜ், வாசுகி (மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும். திருமதி இராசரத்தினம் பரமேஸ்வரி, திருமதி இரத்தினசிங்கம் பரிபூரணம் ஆகியோரின் சகோதரரும், விஜயமாலினி, சசிகலா [ஆசிரியை பிஷப்ஸ் கல்லூரி கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமனாரும், றோயல் கல்லூரி மாணவன் இராஜ்குமார், இராஜ்பிரதாப் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1990 – 12 – 08 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
V. S. கணேசலிங்கம்.

இராமலிங்கம் வீதி.
சாவகச்சேரி.
(15058)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07 – 12 – 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கல் எறிந்த போது மிதிவெடி வெடித்தது!

யாழ்ப்பாணம், டிச. 7
பண்ணைக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒருவர் எறிந்த கல் பட்டு மிதிவெடி வெடித்தது. கல் எறிந்தவர் கண்ணில் காயமடைந்தார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நாவாந்துறையைச் சேர்ந்த லோறன்ஸ் அந்தோனிப்பிள்ளை (35 வயது) என்பவரே காயமடைந்தார். (ஓ–15)

## கண்காட்சி இன்று முடிவு

யாழ்ப்பாணம், டிச 7
யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெற்றுவரும் ''தமிழீழ விடுதலைப் போராட்டவரலாறு'' புகைப்படக் கண்காட்சி இன்றுடன் முடிவடைகின்றது.

இந்தக் கண்காட்சியை இதுவரை பல்லாயிரக் கணக்கானோர் பார்வையிட்டுச் சென்றுள்ளதாக மதிப்பிடப்படுகிறது. [ஓ]

## ஈராக் அமைச்சர் அமெரிக்காவுக்கு!

வாஷிங்டன், டிச. 7
இம்மாதம் 17 ஆம் திகதி ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸ் வாஷிங்டன் செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வளைகுடா நெருக்கடி குறித்து நேரடிப் பேச்சு நடத்த வருமாறு அமெரிக்கா விடுத்த அழைப்பை ஏற்று அவர் அங்கு செல்கிறார்.

## காயமுற்றவர் குணமடைகிறார்

யாழ்ப்பாணம், டிச.7
சாவகச்சேரியில் இம்மாதம் முதலாம் திகதி இடம் பெற்ற ஹெலித் தாக்குதலின் போது காயமுற்ற கந்தையா ஸ்ரீகாந்தரூபி குணமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதடியைச் சேர்ந்த இந்த யுவதி மரணமானார் என்று வெளிவந்த செய்தி தவறாகும்.

அதனால் அவருக்கும் அவரது பெற்றோருக்கும் ஏற்பட்ட மனத்தாங்கலுக்கு வருந்துகிறோம் [அ]

### சாவகச்சேரி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
சேர்க்கப்பட்டுள்ளனர்.

கைதடியைச் சேர்ந்த இராமன் மயிலன் (36 வயது) வியாபாரி, வேலுப்பிள்ளை கார்த்திகேசு [87 வயது] ஆகியோரே அந்த இருவரும் ஆவர். [ஓ-31–117–15]

### விமானக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ழந்தோர் விவரம் வருமாறு:

1. ஜோர்ஜ் அருட்பிரகாசம் [வயது 57 – நெல்லண்டை]— வேலாயுதம் ம. வி. ஆங்கில ஆசிரியர்.

2. முருகப்பர் கணபதிப்பிள்ளை [வயது 66– மாசனை]

3 பத்திநாதர் பிரான்ஸிஸ் [வயது 35] — மயிலிட்டியிலிருந்து இடம் பயர்ந்து சக்கோட்டையில் வசித்தவர்.

4. என். ஜீவராசா [வயது 32 – கன்பொல்லை] — தேங்காய் வியாபாரி.

5. கிருஷ்ணபிள்ளை இந்திராணி [வயது 35 – பருத்தித்துறை] — நான்கு குழந்தைகளின் தாய்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமுற்ற ந. ரவிச்சந்திரன் [வயது 27 –புலோலி கிழக்கு], தி. இராசகுமார் [வயது 20 – தும்பளை மேற்கு] ஆகிய இருவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குண்டு வீச்சுத் தாக்குதல் [illegible] பாடசாலையிலிருந்த மாணவர்கள் சிதறியடித்துக் கொண்டு வீடுகளுக்கு ஓடினார்கள். [உ–118–94-15]

தொண்டர் ஆசிரியர் நியமனம்:

# கொழும்பிலிருந்து பதில் கிடைத்தபின்னரே முடிவு

யாழ்ப்பாணம், டிச 7
தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்குப் போட்டிப் பரீட்சை நடத்துவதா அல்லது நேர்முகப் பரீட்சை நடத்துவதா என்பது கொழும்பிலிருந்து தகவல் கிடைத்த பின்னரே திட்டவட்டமாக முடிவு செய்யப்படும்.

இவ்வாறு வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்களை நேர்முகப் பரீட்சை நடத்தி வழங்குமாறு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப்போது போட்டிப் பரீட்சை நடத்தப்படும் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால் அது குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை என்றும்–

சரியான நிலைப்பாட்டைத் தெரிவிக்குமாறு கொழும்பில் கல்வி அமைச்சிடம் கேட்கப்பட்டுள்ளது என்றும்–

அங்கிருந்து பதில் கிடைத்த பின்னரே இங்கு என்ன செய்வதென்று முடிவு செய்யப்படும் என்றும்– திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

# இராணுவத்திடம் சிக்காது தப்ப முயன்ற தமிழ் மகன்

யாழ்ப்பாணம், டிச. 7
கடந்த செவ்வாயன்று ஒருவாஞ்சிக்குடி எரிவில் பகுதியை இராணுவத்தினரும் ரெலோவினரும் சுற்றிவளைத்த போது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் சுட்டுக் காயப்படுத்தப்பட்டார்.

தன்னைப் பிடிக்க படையினர் வரக்கூடும் என்ற எண்ணத்தில் அவர் தன்னிடம் இருந்த கிரனேட்டுகளின் ''கிளிப்''புகளை கழற்றி அவற்றுக்கு மேல் குப்புறப் படுத்துக்கொண்டார்.

ஆனால் எதிர்பார்த்தபடி படையினர் செல்லவில்லை.

படையினர் சென்ற பின்னர், காயமுற்ற அவரைக் காப்பாற்ற ஓடிச் சென்ற பொது மகன் ஒருவர், காயமுற்றவரை புரட்டிய போது கீழே இருந்த குண்டு வெடித்தது.

அதனால் அவர்கள் இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

### உரும்பராய்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கப்பட்டுள்ளார்.

உரும்பராய் தெற்கில் தனபாலசிங்கம் சரஸ்வதி [38 வயது] என்பரும் அவரது கணவரின் தாயாரான தம்பிராசா இராசம்மா [60 வயது] என்பவருமே பலியாகினர். கணவர் தம்பிராசா தனபாலசிங்கம் [41 வயது] அவரது பிள்ளைகளான திலீபன் [6வயது], விதர்சன் [2 வயது] ஆகிய மூவரும் படுகாயம் அடைந்தனர். [உ–15–72]

## பளை மாணவருக்கு இன்றுமுதல் விடுமுறை

கிளிநொச்சி கல்வி மாவட்டத்துக்கு உட்பட்ட பளை கொடிகாமப் பகுதி பாடசாலைகள் மூன்றாம் தவணை விடுமுறைக்காக இன்று மூடப்படுகின்றன. [ஓ–117]

### வெளிநாட்டாரை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
குடா நெருக்கடிக்கு சமாதானத்தீர்வு காணும் வாய்ப்பு அதிகரித்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து மகாலிங்கம்

யாழ். மின்சார நிலைய வீதியில் 41 ஆம் இலக்க இல்லத்தைச் சேர்ந்த சரவணமுத்து மகாலிங்கம் [ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி] காலமானார். அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன், சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி அன்னபூஷணி எதிர்மனசிங்கத்தின் சகோதரரும், குமாரசுவாமி [இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்], குருகுலசிகாமணி, தியாகராசா [பொறியியலாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்], திருமதி அரியரத்தினம் குமாரச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று 7–12–90 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் ஊரெழு இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

ஊரெழு.
தகவல்:
ஆ குமாரசாமி
[14683]

## ஜோர்ச் அருட்பிரகாசம்

ஜோர்ச் அருட்பிரகாசம் [ஆங்கில ஆசிரியர், வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை] 6–12–1990 இல் அகால மரணமானார்.

இவர் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற முதலியார் ஜோன் அருட்பிரகாசம் தம்பதிகளின் புதல்வனும், கற்கோவளத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற யோசப் முத்தையா தம்பதிகளின் மருமகனும், லிடியா ஞானசோதி [ஆசிரியை, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை] அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற றொபேட், ஜென்றி சாமுவேல் [லண்டன்], தேவராணி, கிறிஸ்ரபெல் ஆகியோரது அன்புச் சகோதரரும், றஞ்சி, லிடியா, இந்திரா [லண்டன்], ஞானநேசன், துரைரத்தினம், ஞானப்பிரகாசம், ஞானரட்ணம் [கனடா], ஞானசௌந்தரி, ஞானேஸ்வரி, ஞானமலர், ஞானசிகாமணி ஆகியோரது மைத்துனரும், செல்வரட்ணம், றொபின் டேவிற், சற்குணானந்தராசா, அல்போன்ஸ் ஆகியோரது சகலனுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் 7-12-1990 இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்:
மு. ஞானநேசன்

நெல்லண்டை,
பருத்தித்துறை.
[15059]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org